DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 9/2024

Miscellaneous :

Sessions : PW 8

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | தர்மலிங்கம் |
| Father / Husband Name | சிவலிங்கம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 02.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மாமல்லபுரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் நான் 2023 ம் வருடம் மதுராந்தகம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 24.01.2023 ம் தேதி மாலை 4.00 மணிக்கு உதவி ஆய்வாளர் ரமேஷ் நிலைய பொறுப்பில் இருந்தபோது கௌரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 41/2023 இதச பிரிவுகள் 279, 337, 304A இதச–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஹரிகிருஷ்ணன் மற்றும் விக்னேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர் வழக்கில் இறந்துபோன ஹரிஷ்குமார் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். **(அந்த பிரேத விசாரணை அறிக்கை முறையே அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**3.** பின்னர் வழக்கில் இறந்துபோன ஹரிஷ்குமார் என்பவரின் பிரேத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த மருத்துவர்களை விசாரித்து அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(அந்த பிரேத பரிசோதனை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலான சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் 04.02.2023 ம் தேதி மதியம் 11.00 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரியை கைது செய்து பிணையில் விடுவித்தேன். பின்னர் விபத்தில் பங்கெடுத்த வாகனமான TN 19 BV 2975 என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் செல்வி என்பவரை விசாரித்து

அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **(அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் காயம்பட்ட நபர் இறந்துவிட்டதால் வழக்கின் சட்டப்பிரிவான 279, 337, 304A இதச–விலிருந்து 279, 304A இதச–வாக சட்டப்பிரிவை மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக 279, 304A இதச பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

5. இந்த வழக்கின் புகாரை நான் பெறவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த மறுநாள் மாலை 4.00 மணிக்கு தான் விபத்து பற்றிய தகவல் எங்கள் காவல் நிலையத்திற்கு வந்தது என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து தகவல் எத்தனை மணிக்கு வந்தது என்றால் 23.01.2023 அன்று இரவு 12.45 மணிக்கு தகவல் வந்தது. பொதுவாக மருத்துவமனையில் தகவல் வந்தாலும், நாங்கள் விபத்து குறித்து விசாரணை செய்வோம் என்றால் சரிதான். விபத்தில் பாதிக்கப்பட்ட நபரிடம் வாக்குமூலம் பெற்று வழக்கை விசாரணை செய்யலாம் என்றால் சரிதான், இந்த வழக்கில் காயம்பட்ட நபர் அப்போது பேசக்கூடிய நிலையில் இல்லை. இந்த வழக்கில் சம்பவயிட சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் விபத்தில் பாதிக்கப்பட்ட நபரின் உறவினர்களை தான் சாட்சிகளாக விசாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக தேசிய நெடுஞ்சாலையில் வாகன நெரிசல் இருக்கும் என்றால் சரியல்ல.

6. நான் விபத்து நடந்து 30 மணி நேரம் கழித்துதான் சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலையில் விபத்து ஏற்படும்போது காலத்தாமதாமாக விசாரணையை தொடங்கினால் விபத்து குறித்த தடயங்கள் அழிவதற்கான வாய்ப்புகள் உள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்திருந்தால் அந்த விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு கீழ் பணிபுரியும் உதவி ஆய்வாளர் தயார் செய்த இறுதி அறிக்கையில் கையொப்பம் செய்துவிட்டு அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 9/2024

Miscellaneous :

Sessions : PW 7

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | கோபாலகிருஷ்ணன் |
| Father / Husband Name | முருகன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 02.06.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ராமாபுரம் கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 22.01.2023 ம் தேதி இரவு 12.00 மணிக்கு மேலவளம்பேட்டை SM மகாலில் திருமண நிகழ்ச்சியை முடித்துவிட்டு ஹரிஷ்குமாரும், ஆஜர் எதிரியும் இருசக்கர வாகனத்திலும், நானும் ஜனா என்பரும் வேறொரு இருசக்கர வாகனத்திலும் சென்றோம். அப்போது கருங்குழி அருகே ஆஜர் எதிரி ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் திடீரென்று பிரேக் பிடிக்கும்போது டயர் வெடித்து விபத்து ஏற்பட்டது. நாங்கள் பின்னால் வந்தோம் அப்போது சம்பவத்தை நேரடியாக பார்த்தேன். அந்த விபத்தில் ஆஜர் எதிரிக்கு பல் உடைந்து வாய் முழுவதும் ரத்தமாக இருந்தது. ஹரிஷ்குமாருக்கு வலிப்பு வந்துவிட்டது. நாங்கள் காயம்பட்ட நபர்களை மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். பின்னர் மேல் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். 25.01.2023 ம் தேதி ஹரிஷ்குமார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்மந்தமாக ஹரிஷ்குமாரின் அம்மா புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. விபத்து நடந்தபோது நான் எவ்வளவு தொலைவில் இருந்தேன் என்றால் சுமார் 400 மீட்டர் தொலைவில் இருந்தேன். விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை என்றாலும், முகூர்த்த நாட்களில் நெரிசல் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். எங்களுக்கு முன்பு சுமார் எத்தனை வாகனங்கள் சென்றது என்றால் 10-20 வாகனங்கள் இருக்கும். நாங்கள் சென்று பார்த்தபோது அவர்கள் இருவரும் கீழே விழுந்துகிடந்தார்கள் என்றால் சரிதான். பொதுவாக முன்னால் செல்லும் வண்டி விபத்திற்கு உள்ளானால் அதை எங்களால் பார்க்க முடியாது என்றால் சரிதான். ஏதோ ஒரு வாகனம் இடித்து விட்டு சென்றதை ஆஜர் எதிரி தான் அதிவேகமாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்று போலிசார் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.